**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**STC. No: 166/2025** Date: 11.05.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | பார்த்திபன் |
| Father's Name | : | கோவிந்தசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 11.05.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது கொளகத்தூரான் கொட்டாயில் குடியிருந்து மேசன் வேலை செய்துவருகிறேன். விபத்தில் காயம்பட்ட மித்துவா எனது மகன். கடந்த 05.01.2024 ம் தேதி காலை 9.00 மணிக்கு என் மகன் மித்துவா பச்சினம்பட்டியிலுள்ள பாரத் மெட்ரிகுலேசன் பள்ளி பேருந்திற்கு பேருந்து ஏறுவதற்காக என் வீட்டிலிருந்து கொளகத்தூரான் கொட்டாய் செல்லும் மண்பாதையில் சென்று பிரிவில் பாலக்கோடு – தருமபுரி செல்லும் சாலையை வடக்கிலிருந்து தெற்காக கடந்தபோது பாலக்கோட்டிலிருந்து தருமபுரி நோக்கி வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் தகவல் தெரிந்து சம்பவ இடம் சென்று பார்த்தபோது என் மகனுக்கு முகத்தில் காயம் ஏற்பட்டிருந்தது, பல் உடைந்திருந்தது, உள்காயங்கள் இருந்தது. என் மகனை தருமபுரி அரசு மருத்துவமனைக்கும், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கோயம்பத்தூர் KMCMC மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என்னிடம் கா ண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**STC. No: 166/2025** Date: 11.05.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 2** |
| Name | : | மித்துவா |
| Father's Name | : | பார்த்திபன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 11.05.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது கொளகத்தூரான் கொட்டாயில் குடியிருந்து 7 ம் வகுப்பு படித்துவருகிறேன். கடந்த 05.01.2024 ம் தேதி காலை 9.00 மணிக்கு பள்ளிக்கு செல்வதற்காக நான் பயின்றுவந்த பாரத் மெட்ரிகுலேசன் பள்ளிக்கு செல்வதற்காக வீட்டிலிருந்து பள்ளி பேருந்து நிற்கும் பாப்பாரப்பட்டி – பழைய தருமபுரி ரோட்டிற்கு சென்றபோது தருமபுரி – பாலக்கோடு செல்லும் சாலையில் பள்ளி பேருந்து வருவதை பார்த்து ரோட்டை நான் கடந்தபோது ஒரு இருசக்கர வாகனம் மோதியது. விபத்தில் எனக்கு முகத்தில் அடிபட்டது. எனக்கு மயக்கமானதால் யார் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டினார்கள் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் சாலையை கடந்தபோது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் வாகனம் வருவதை இரண்டு புறமும் பார்க்காமல் திடீரென ரோட்டை கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் பேருந்தை மட்டும் பார்த்துவிட்டு சாலையை சரிவர பார்த்து கடந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**